**OS No.49/2024**

PW 1 – பரமேஸ்வரி

நாள் 14.10.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் 13 ஆண்டுகாளமாக சென்னையில் இருக்கிறேன். சென்னையில் இருந்து ராஜகம்பீரத்திற்கு நல்லது, கெட்டது நிகழ்ச்சிகளுக்கு வரும் பழக்கம் உள்ளது. திருமணத்திற்கு பின்னிட்டு தான் நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன்.

2010 ல் எனக்கு திருமணம் நடந்தது. 2010 க்கு முன்னர் நான் ராஜகம்பீரத்தில் தான் இருந்து வந்தேன். ராஜகம்பீரத்தில் சுமார் 1500 வீடுகளுக்கு மேல் இருக்கும். ராஜகம்பீரத்தில் உள்ளவர்களைப் பற்றி ஓரளவிற்கு எனக்குத் தெரியும்.

தாவா சொத்து போக என் அம்மாவின் பெயரில் இரண்டு வீடுகள் உள்ளன. நான் தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன் வில்லங்கம் பார்த்து தான் வாங்கினேன். எனக்கு முன்னர் தாவா சொத்தை நான்கு நபர்கள் கிரயம் பெற்று பட்டா, சிட்டா அவர்கள் பெயரில் மாற்றம் செய்துள்ளனர் என்றால் சரிதான்.

வழக்கில் நான்கு பேருக்கு உள்ள மூல பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 1 கிரயப்பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். நான் டிப்ளமோ டீச்சர் டிரைனிங் படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அப்துல் வாங்கிய கிரய ஆவணத்தில் கிரயம் கொடுப்பவர் எனக்கு பூர்வீக

பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

ஏற்கனவே நான்கு பேர் வாங்கிய கிரய பத்திரத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன்.

என் கணவர் தனியார் நிறுவனத்தில் இன்ஜீனியராக உள்ளார். அவர் மாதம் ரூபாய் 30000/– ம் சம்பளம் பெற்று வருகிறார். நான் இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து சென்னையில் வசிக்கவில்லை என்றாலும் ராஜகம்பீரத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் மகபுஜெயராணியிடம் இருந்து கிரயம் வாங்கினேன். அவருக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் அவர் உடன் பிறந்த சகோதரர் முகமது யூசுப் மூலம் செட்டில்மெண்ட் அடிப்படையில்கிடைத்தது.

முகமது யூசுப் – க்கு தாவா சொத்து நாகலெட்சுமியிடம் கிரயம் பெற்றார். நாகலெட்சுமி அப்துல் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றார். அப்துல் என்பவர் தாவா சொத்தை முத்து ஆசாரி மகன் சேகர் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றார். சேகருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்பது எனக்குத் தெரியாது.

சேகர் மற்றும் அவருடன் பிறந்தவர்களை எனக்குத் தெரியாது. சேகர் வீடு என் வீட்டிற்கு அருகில் இல்லை. மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 49/2024 என்ற வழக்கில்

சேகரின் உடன் பிறந்த சகோதரிகள் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் என்னை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்ததால் எனக்குத் தெரியும்.

அந்த வழக்கில் நான் அஜராகியுள்ளேன் என்றாலும் அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மகபுஜெயராணி அந்தமானில் வசித்து வருகிறார். எத்தனை வருடங்களாக வசித்து வருகிறார் என்று கேட்டால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் கடந்த 13.02.2024 ம் தேதி அன்று மானாமதுரை காவல் நிலையத்தில் பிரதிவாதியை காலி செய்ய புகார் மனு கொடுத்தேன் என்றும், மேற்படி புகார் மனு சம்பந்தமாக எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றுசொல்லியிருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் பிரதிவாதிகள் தாவா சொத்தில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தனியாக வசித்து வருவதாக தான் சொல்லியுள்ளேன். பிரதிவாதியின் கணவர் இறந்த விபரம் எனக்குத் தெரியும். பிரதிவாதியின் மகன் கோயம்புத்தூரில் வசித்து வருகிறாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

தாவா சொத்து நான் கிரயம் வாங்கியதில் இருந்து என் அனுபவத்தில் இருந்து வரவில்லை என்றால் பிரதிவாதி காலி செய்ய மறுத்து வருவதாக தெரிவித்தார். சிவகங்கை மாவட்ட காவல்

கண்காணிப்பாளரிடம் கடந்த 18.03.2024 ம் தேதி பிரதிவாதி மீது புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என சொல்லியிருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 9, 10, ஆகிய ஆவணங்களின் மனு ரசீது மட்டுமே உள்ளது என்றும் மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 9, 10 சம்பந்தமாக கொடுத்த புகார் மனுவில் எந்த உண்மைத்தன்மையும் இல்லை என்பதால் காவல் நிலையத்தில் மனு சம்பந்தமாக பரிசீலனை செய்யவில்லைஎன்றும் தாவா சொத்து சம்பந்தமாக மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

தாவா சொத்து நத்தம் நிலவரித் திட்டத்தின்படி மானாமதுரை தனிவட்டாட்சியர் கடந்த 13.04.1991 ம் ஆண்டு முத்துச்சாமி ஆசாரி மகன் முத்து ஆசாரிக்கு புதிய சர்வே எண் 240/8, பழைய சர்வே எண் 109/2 , பட்டா எண் 391 ன் படி வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்து பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டின் மின்சார இணைப்பை துண்டிக்க பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கில் மின் இணைப்பை துண்டிக்க உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான். இதுசம்பந்தமான ஆவணத்தை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் மேற்படி உத்தரவு நகல் கிடைக்கப்பெறவில்லை.

உத்தரவு என் கைக்கு வந்துவிட்டது என்றும் நான்

வழக்கிற்காக மறைத்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ரிட் மனுவின் உத்தரவினை நிறுத்திவைக்கக்கோரி WP (MD ) No. 23798/2025 என பிரதிவாதி தரப்பில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்து அதில் வாதி தரப்பில் வழங்கிய உத்தரவினை ஸ்டே செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேல்முறையீடு சம்பந்தமாக இரண்டு பெஞ்ச் உள்ள நீதிபதிக்கு மாற்றம் செய்யப்படஉள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதி தரப்பு வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது )**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**

**District Munsif,**

**Manamadurai.**